சென்னை பெரியார் நகருக்கு (பெரவள்ளூர்) குடிதண்ணீர் மற்றும் பாதாள சாக்கடை வசதிகள் செய்து தரும் திட்டம்.

*வினா எண். 787—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அரசு ஊழியர்களுக்கென ஏற்படுத்தப் பட்ட பெரியார் நகருக்கு (பெரவள்ளூர்) கார்ப்பரேஷன் குடிதண்ணீர் மற்றும் பாதை (பாதாள சாக்கடை) வசதிகள் செய்துதர அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) (1) சென்னையில் அரசு ஊழியர்களுக்கென ஏற்படுத்தப்பட்ட பெரியார் நகருக்கு (பெரவள்ளூர்) குடிதண்ணீர் மற்றும் பாதாளச் சாக்கடை வசதிகள் செய்து தரும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

(2) சாலை அமைக்கும் திட்டம் சென்னை மாநகராட்சியால் செயற்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) (1) குடிதண்ணீர் }
பாதாள சாக்கடை } கேள்விக்கு இடமில்லை.

(2) பாதை : பெரியார் நகருக்கு (பெரவள்ளூர்) சாலை அமைக்கும் பணிகள் தெற்கு எல்லைச் சாலையைத் தவிர மற்ற எல்லாச் சாலைகளும் ஏற்கனவே அமைத்து முடிக்கப்பட்டு விட்டன. தெற்கு எல்லைச்சாலையில் தண்ணீர் தேக்கத்தினாலும், சாலை அமைக்கும் பாதையில் ஆக்ரமிப்புகள் இருந்ததாலும் இவ்வேலை சென்ற ஆண்டில் நடைபெறவில்லை. சாலை அமைக்கும் பணிக்கான ஒப்பந்தம் சமீபத்தில் முடிவெடுக்கப் பட்டிருப்பதால் இந்தப் பணி இந்த நிதி ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களுக்கெல்லாம் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தைக் கொள்கையாக அரசு வைத்திருக்கிறது. இந்த பெரியார் நகரில் உள்ள அரசு ஊழியர்களுக்கு குடிதண்ணீர் வழங்க அதுவும் நகராட்சிக்கு உட்பட்ட அந்தப் பகுதியில் உடனடியாக குடிதண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன். இன்னொன்று, அங்கே மழைக்காலங்களில் தண்ணீர் ரோடுகளில் தேங்கி விடுவதால், அந்தத் தண்ணீரை பாதாள சாக்கடை போன்று அமைத்து அந்த நீரை வெளியேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1982 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் நகர் பகுதிக்கு புழல் ஏரியில் இருந்து தண்ணீர் கொடுக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, தற்சமயம் அங்கே உள்ளவர்கள் அதற்கு ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும், அடுத்து மழைக்காலங்களில் மழைநீர் தேங்காமல் தடுப்பதற்கு சென்னை மாநகராட்சி பேரவள்ளூர் அரசு ஊழியர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பெரியார் நகரில் மழைநீர் வடிகால்வாய்கள் கட்ட ரூ. 45,81,800-க்கு ஒரு சிறப்புத் திட்டம் தீட்டி அதன்படி அந்த சிறப்புத் திட்டத்தை நிர்வாக வசதிக்காகவும், துரித வேலைகளை முடிப்பதற்காகவும் ஏழு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ. 20.34 லட்சத்திற்கான வேலையை மூன்று பிரிவுகளாகப் பிரித்து முதல் பிரிவினுடைய வேலைகள் முடிந்துவிட்டன. மற்றும் இரண்டாவது, மூன்றாவது பிரிவுக்கான வேலைகள் நடந்து கொண்டுள்ளன. மீதமுள்ள ரூ. 25.47 லட்சத்திற்கான வேலையை நான்கு, ஐந்து, ஆறு மற்றும் ஏழு பிரிவுகளாகப் பிரித்து, அதற்குண்டான வேலைகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் வைப்புத்தொகை கட்டியவுடன் அந்த வேலைகளையும் எடுத்து முடிக்கப்படும். இந்தச் சிறப்புத் திட்டத்தால், பெரியார் நகரில் 30 அடி, 40 அடி மற்றும் 50 அடி அகலமுள்ள தெருக்களில் மொத்தம் 7400 மீட்டர் நீளத்திற்கு வலுவேற்றப்பட்ட கற்பலகையினாலான மூடிய மழைநீர் கால்வாய்கள் கட்டி அதை தற்போது கட்டிமுடிக்கப்பட்ட ஐவஹர் நகர் மழைநீர் வடிகால் வாயுடன் இணைக்கப்படும்.

சென்னை பனைமரத்தொட்டிப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள நிலத்தடி குழாய்க்கிணறுகள்.

*வினா எண். 788—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை இராயபுரம் பகுதியில் உள்ள பனைமரத் தொட்டியில் (வட்டம் 12) அமைந்துள்ள கார்ப்பரேஷன் லைனில் சென்னை மாநகராட்சியால் பொருத்தப்பட்டிருக்கும் போரிங் பம்புகளில் வரும் தண்ணீரில் மண்ணெண்ணெய் கலந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?